ஸ்ரீ:

## அப்பிள்ளை திருவாய்மலர்ந்தருளிய

# ஆழ்வார்கள் வாழி திருநாமம்

தனியன்
நேரிசை வெள்பா
அம்புவியிலாழ்வார்க ளாண்டாள் மதுரகவி
தம்பதிநாள்மாதந் தமிழ்த்தொகையை--நம்புவிக்கே
செப்புளாமின்றனமாய்ச் சேர்ந்த பெருவாழிசெய்த
அப்புளாந்தாளே யரண்.

நூற்பயன்
எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்
மண்ணுலகத்துள்ளோர்கல் மகிழ்ந்துவாழ
மணவாளமாமுனிக ளருள்தன்னாலே
பண்ணருளிச் செயல்விளக்கம்வாழிநாமம்
பத்தியுடனிவ்வுலகிற்பயில்வார்கோட்போர்
விண்ணுலகத்த்தோர்கலினுங் கீர்த்தியுற்று
விளங்கியிட மெய்ஞ்ஞான வாழ்வுபெற்றே
கண்ணனடியார்களுடன் கலந்துநாளுங்
காசினியிர்சதிராக வாழ்வர்த்தாமே.
வேதத்தினுண்பொருளைத் தமிழால்நாளும்
விளக்கிடப் பன்னிருவர்வந்து தோன்றும்
மாதத்தை யவரவர்களுதித்தநாளை
வாழ்பதியைக் கலைத்தொகையை மனத்தில்வைத்துப்
போதத்தைத்தரும் தமிழால் வாழிநாமம்
பூதலத்திற்பேசுகின்றேனிதனைக்கற்பார்
பாதத்தை யென்முடி மேலணியாப்பூண்டு
பன்னாளுங்கைகூப்பிப் பணிவேன்யானே.

நூல்
போதமிகும் பொய்கையார் பூதத்தார் வாழியே
புகழ் பேயார் மழிசையர்கோன் புத்தூரன் வாழியே
நாதமுனி தொழுங்குருகைநாவீரன் வாழியே
நற்பாணண் கொல்லிநகர்நாதனார் வாழியே
ஆதரிக்குந்தொண்டரடிப்பொடிதாள்கள் வாழியே
அருட்கலியன் மதுரகவி யாண்டாளும் வாழியே
ஏதமற்ற நாலாயிரப் பனுவல் வாழியே
இவருதித்த நாள் மாத மெழிற்பதியும் வாழியே

பொய்கையாழ்வார்
செய்யதுலாவோணத்திற் செகத்துதித்தன் வாழியே
திருக்கச்சிமாநகரஞ் செழிக்கவந்தோன் வாழியே
வையந்தகளிநூறும் வகுத்துரைத்தான் வாழியே
வனசமலர்க்கருவதனில் வந்தமைந்தான் வாழியே
வெய்யகதிரோன் தன்னை விளக்கிட்டான் வழியே
வேங்கடவர் திருமலையை விரும்புமவன் வாழியே
பொய்கைமுனி வடிவழகும் பொற்பதமும் வாழியே

பொன்முடியுந் திருமுகமும் பூதலத்தில் வாழியே

## பூதத்தாழ்வார்

அன்பேதகளிறுநூறு மருளினான் வாழியே
ஐப்பசியிலவிட்டத்தி லவதரித்தான் வாழியே
நன்புகழ் சேர்குருக்கத்தி நான்மலரோன் வாழியே
நல்லதிருக்கடன்மல்லை நாதனார் வாழியே
இன்புருகு சிந்தை திரியிட்டபிரான் வாழியே
எழில் ஞானச்சுடர்விளக்கேற்றினான் வாழியே
பொன்புரையுந் திருவரங்கர் புகழுரைப்போன் வாழியே
பூதத்தார் தாளிணையிப் பூதலத்தில் வாழியே

## பேயாழ்வார்

திருக்கண்டேனென நூறுஞ் செப்பினான் வாழியே
சிறந்தவைப்பசியிற் சதயம் செனித்தவள்ளல் வாழியே
மருக்கமழும் மயிலைநகர் வாழவந்தோன் வாழியே
மலர்க் கரிய நெய்தல்தனில் வந்துதித்தான் வாழியே
நெருக்கிடவேயிடைகழியில் நின்றசெல்வன் வாழியே
நேமிசங்கன் வடிவழகை நெஞ்சில்வைப்போன் வாழியே
பெருக்கமுடன் திருமழிசைப்பிரான் தொழுவோன் வாழியே
பேயாழ்வார் தாளிணையிப் பெருநிலத்தில் வாழியே

## திருமழிசையாழ்வார்

அன்புடனந்தாதி தொண்ணூற்றாறுரைத்தான் வாழியே
அழகாருந் திருமழிசையமர்ந்தசெல்வன் வாழியே
இன்பமிகுதையில் மகத்திங்குதித்தான் வாழியே
எழிற்சந்தவிருத்தம் நூற்றிருபதீந்தான் வாழியே
முன்புகத்தில் வந்துதித்த முனிவனார் வாழியே
முழுப்பொன்னிப் பெருக்கெதிர்செல் முதிர்கவியோன் வாழியே
நன்புவி நாலாயிரத்தொழு நூற்றிருந்தான் வாழியே
நங்கள்பத்திசார விருநற்பதங்கள் வாழியே

## நம்மாழ்வார்

ஆனதிருவிருத்தம் நூறு மருளினான் வாழியே
ஆசிரியமேழுபாட் டலித்தபிரான் வாழியே
ஈனமறவந்தாதி யெண்பதேழீந்தான் வாழியே
இலகுதிருவாஇமொழி யாயிரத்தொருநூற்றிரண்டுரைத்தான் வாழியே
வானணியும்மாமாடக் குருகைமன்னன் வாழியே
வைகாசி விசாகத்தில் வந்துதித்தான் வாழியே
சேனையர்கோனவதாரஞ் செய்தவள்ளல் வாழியே
திருக்குருகை சடகோபன் திருவடிகள் வாழியே

## குலசேகராழ்வார்

அஞ்சனமாமலைப்பிறவி யாதரித்தோன் வாழியே
அணியரங்கர்மணத்தூனை யடைந்துய்த்தோன் வாழியே
வஞ்சிநகரந்தன்னில் வாழவந்தோன் வாழியே
மாசி தனிற்புனர்பூசம் வந்துதித்தான் வாழியே
அஞ்சலெனக்குடப்பாம்பி லங்கையிட்டான் வாழியே
அநவர தமிராமகதை யருளுமவன் வாழியே
செஞ்சொல்மொழி நூற்றஞ்சுஞ் செப்பினான் வாழியே
சேரலர்கோன் செங்கமலத்திருவடிகள் வாழியே

## பெரியாழ்வார்

நல்லதிருப்பல்லாண்டு நான்முன்றோன் வாழியே
நானூற்றறுபத்தொன்றும் நமக்குரைத்தான் வாழியே
சொல்லரியவானிதனிற் சோதிவந்தான் வாழியே
தொடை சூடிக்கொடுத்தாள் தொழுந்தமப்பன் வாழியே
செல்வநம்பிதன்னைப்போற் சிறப்புற்றான் வாழியே
சென்றுகிழியறுத்து மால்தெய்வமென்றான் வாழியே
வில்லிபுத்தூர்நகரத்தை விளங்கவைத்தான் வாழியே
வேதியர்கோன் பட்டர்பிரான் மேதினியில் வாழியே

## தொண்டரடிப்பொடியாழ்வார்

மண்டங்குடியதனை வாழ்வித்தான் வாழியே
மார்கழியிர் கேட்டை நாள்வந்துதித்தான் வாழியே
தொண்டிரை சூழரங்கரையே தெய்வமென்றான் வாழியே
திருமாலை யொன்பதஞ்சும் செப்பினான் வாழியே
பண்டு திருப்பள்ளியெழுச்சிப் பத்துரைத்தான் வாழியே
பாவையர்கள் கலவிதனை பழித்தசெல்வன் வாழியே
தொண்டுசெய்து துளபத்தால் துலங்கினான் வாழியே
தொண்டரடிப்பொடியாழ்வார் துணைப்பதங்கள் வாழியே

## திருப்பாணாழிவார்

உம்பர்தொழும்மெய்ஞ்ஞானத் துறையூரான் வாழியே
உரோகிணிநாள் கார்த்திகையி லுதித்தவள்ளல் வாழியே
வம்பவிழ்தார்முனிதோளில் வந்தபிரான் வாழியே
மலர்க்கண்ணை வேறொன்றில் வையாதான் வாழியே
அம்புவியில் மதிளரங்கரகம் புகுந்தான் வாழியே
அமலனாதிபிரான்பத்து மருளினான் வாழியே
செம்பொனடிமுடியளவுஞ் சேவிப்போன் வாழியே
திருப்பாணன் பொற்பதங்கள் செகதலத்தில் வாழியே

## திருமங்கையாழ்வார்

கலந்த திருக்கார்த்திகையில் கார்த்திகைவந்தோன் வாழியே
காசினியிற்குறையலூர்க்காவலோன் வாழியே
நலந்திகழாயிரத்தெண்பத்து நாலுரைத்தான் வாழியே
நாலைந்துமாறைந்தும் நமக்குரைத்தான் வாழியே
இலங்கெழுகூற்றிருக்கை யிருமடலீந்தான் வாழியே
இம்மூன்றிலிருநூற் றிருபத்தேழீந்தான் வாழியே
வலந்திகழுங்கு முதவல்லி மணவாளன் வாழியே
வாட்கலியன் பரகாலன் மங்கையர்கோன் வாழியே

## மதுரகவியாழ்வார்

சித்திரையிற்சித்திரைதிருநாள் சிறக்கவந்தோன் வாழியே
திருக்கோளூரவதரித்த செல்வனார் வாழியே
உத்தரகங்காதீரத் துயர்தவத்தோன் வாழியே
ஒளிகதிரோன் தெற்குதிக்க வுகந்துவந்தோன் வாழியே
பத்தியொடு பதினொன்றும் பாடினான் வாழியே
பராங்குசனே பரனென்று பற்றினான் வாழியே
மத்திமமாம்பதப்பொருளை வாழ்வித்தான் வாழியே
மதுரகவி திருவடிகல் வாழிவாழிவாழியே

## ஆண்டாள்

திருவாடிப்பூரத்திற் செகத்துதித்தாள் வாழியே

திருப்பாவைமுப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்பூதூர்மாமுனிக்குப் பின்னானாள் வாழியே
ஒருநூற்றுநாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயரரங்கர்க்கேகண்ணி யுகந்தளித்தாள் வாழியே
மருவாருந்திருமல்லி வளநாடி வாழியே
வண்புதுவைநகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே

Back